**ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைப்பாட்டினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1:2:1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பொறுப்பை ஏற்பதாக ஒரு கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18

(i) நிறுவகம் தொடர்ந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் ரூபா 4,990,323 கிரயமுள்ள 09 மோட்டார் வாகனங்கள் முற்றாக பெறுமானத்தேய்விடப்பட்டு நிதிக்கூற்றுக்களின் தேறிய மீதி

பூச்சியமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவை மீள்பெறுமதியிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ii) நிறுவக உத்தியோகத்தர்களின் அறிவுத்திறன் விருத்திக்காக வழங்கப்படும் புலமைப்பரிசிற்காகச் செலவிடப்பட்ட பணத்தின் ரூபா 20,691,656 கூட்டுத்தொகை ஐந்தொகையில் ஊழியர் அபிவிருத்தி எனும் பெயரில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

**1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

அறவிடப்பட வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத் தொகையான ரூபா 173,700 நிதிக்கூற்றுக்களில் அறவிடப்பட வேண்டிய காப்புறுதி நட்டஈடாகக் காண்பிக்கப்படாது ஏனைய கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகள்/ பதிவேட்டு மீதிகளுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் படியான மீதி | பட்டோலை/ பதிவேடு | பட்டோலை/ பதிவேடு | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| கூற்று மற்றும் நாட்குறிப்பு | 1,456,482 | பட்டோலைகள் | 1,467,052 | 10,570 |
| நுகர்வுப் பொருட்கள் | 1,161,989 | மேற்படி | 1,159,364 | 2,625 |
| விற்பனை நிலையம் | 332,329 | மேற்படி | 329,427 | 2,902 |

| | | | | |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களின் கொள்வனவு | 830,294 | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 712,274 | 118,020 |

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

பின்வரும் கணக்கு விடயங்களை அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்ட சான்றாவணங்கள் இன்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| தளபாட உபகரணங்கள் | 11,474,394 | (i) விபரமான பட்டோலைகள்<br>(ii) பொருள் மெய்மையாய்வு அறிக்கை<br>(iii) 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் | 2,571,807 | |
| மோட்டார் வாகனம் | 2,633,449 | (i) பொருள் மெய்மையாய்வு அறிக்கை<br>(ii) 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு |
| நூல்நிலைய புத்தகங்கள் | 2,207,253 | |
| அறவிடமுடியாக்கடன் பதிவழிப்பு | 386,902 | அமைச்சின் அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் கடன் | 2,400,000 | வாகனம் கொள்வனவு செய்யப்பட்டமைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் |

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சேவையை விட்டுச் சென்ற ஊழியர்கள் இருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 234,732 தொகையான மீதிகள் 4 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 20 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 660,758தொகையான முற்பணங்கள் 2010 திசெம்பர் 31 வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வெளிநிறுவகங்கள் மற்றும் 08 தனிப்பட்டவர்களிடம் இருந்து ரூபா 461,742 தொகை 1 வருடம் முதல் 06 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக பெறவேண்டியதாகக் காணப்பட்டது.

(iv) நிதிக்கூற்றுக்களில் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னரில் இருந்து காணப்பட்ட இனங்காணப்படாத கடன்பட்டோர் (பிணை) ரூபா 110,374 தொகை மீளாய்வாண்டின் போது கடன்பட்டோரிலிருந்து கழிக்கப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(v) 14 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் முடிவுற்றதன் பின்னர் எஞ்சியிருந்த ரூபா 5,102,707 தொகையும் 2009 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகை நிறுவகத்தின் மீண்டெழும் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோரை தீர்த்துவைப்பதற்கு போதிய பணம் நிறுவகத்தில் இல்லை என 2011 ஏப்ரல் 07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் நிறுவகப் பணிப்பாளர் அறிவித்திருந்தார்.

(vi) மீளாய்வாண்டின் இறுதி வரை 18 கடன்பட்டோரிடம் இருந்து ரூபா 453,955 தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் இதில் 6 பேருக்கு மாத்திரம் கடனைத் தீர்க்குமாறு அறிவித்து கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(vii) சேவை இடைநிறுத்தப்பட்ட ஊழியரிடம் இருந்து 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட உள்ள ரூபா 98,991 தொகையான நிலுவைக் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(viii) கடன் திட்டத்தில் கடன் வழங்கப்பட்ட 05 ஊழியர்கள் தற்போது சேவையில் இல்லாதிருந்ததுடன் அவர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்த கடன் மீதி ரூபா 120,237 ஆகக் காணப்பட்டது.

(ix) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய புலமைப்பரிசில் கடன்பட்டோர் மீதி ரூபா 22,331,454 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 06 பேரிடம் இருந்து ரூபா 11,438,649 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்த போதிலும் ஆண்டின் போது எவ்வித தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) | குறித்த பணிக்கான துணைக் கட்டுநிதியாக ரூபா 20,000 இற்கு மேலாக 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 130,000 வழங்கப்பட்டிருந்தது. |

(ஆ) சுற்றறிக்கை

--------------------

| | |
|---|---|
| (i) 41/90 ஆம் இலக்க 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | செயற்படும் நிலையில் உள்ள வாகனங்களின் நுகரப்படும் எரிபொருளின் அளவு தொடர்பாக 6 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டிய எரிபொருள் பரிசேதனை 2005 பெப்ரவரி 01 ஆம் திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 01/2002 ஆம் இலக்க 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தி | நிறுவகத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் நிறுவனத்தின் 7 வாகனங்களில் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 கொள்வனவு நடைமுறை வழிகாட்டி கோவையின் 2.14.1 ஆம் பந்தி | (i) வாகனப் பழுதுபார்த்தலுக்காக விலை மனுக்கோரப்பட்டிராததுடன் பதிவு செய்யப்பட்டிராத வழங்குனர் நிறுவகத்தினால் 11 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,391,197 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| | (ii) கேள்வி நடைமுறை முறையாகப் பின்பற்றப்படாது 28 குளிரூட்டல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 1,509,206 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

### 1.2.7 அதிகாரப் பொறுப்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

திறைசேரி அங்கீகாரம் இன்றி நிறுவக ஊழியர்களுக்கு வீடமைப்புக் கடன் திட்டத்தினை அமுல்ப்படுத்தவற்காக வங்கி ஒன்றில் ரூபா 2,000,000 தொகை

தொடக்க வைப்பாக வைக்கப்பட்டு அவ் வைப்பை அடிப்படையாகக் கொண்டு கடனை வழங்குவதற்கு 1993 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட வைப்புத்தொகையான ரூபா 2,361,944 இற்கு மிகையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,629,394 தொகையான கடன், ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் நிதியத்தினால் பேணப்பட்டுவரும் வீடமைப்புக் கடன் திட்டம் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2:1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 13,298,964 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,647,506 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,651,458 தொகையான வீழ்ச்சிக்கு நிர்வாகச் செலவினங்கள் உயர்வடைந்தமை மற்றும் திறைசேரி மானியங்கள் குறைவாகக் கிடைக்கப்பெற்றமை போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

### 2.2 செயற்பாடு

மீளாய்வாண்டின் போது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 15 செயற்திட்டங்களும் முன்னைய ஆண்டின் 04 செயற்திட்டங்களும் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தன. இதில் 14 செயற்திட்டங்கள் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,572,435 பெறுமதியான 02 செயற்திட்டங்களுக்காக அவசியமான நிதி மற்றும் தகவல்கள் பெறப்பட்டிராமையால் கைவிடப்பட்டிருந்தன.

**2.3 முகாமைத்துவ திறமையீனங்கள்**

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சம்பளமற்ற லீவைப் பெற்று வெளிநாட்டிற்குச் செல்வதற்கு முன்னர் சகல கடன் தொகையையும் தீர்த்துவைக்க வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டில் சம்பளமற்ற லீவைப் பெற்று வெளிநாட்டிற்குச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 99,362 தொகையான கடன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) செலவிடுவதற்கு எதிர்பார்த்த தொகையினை சரியாக மதிப்பிடாது 14 உத்தியோகத்தர்கள் ரூபா 270,000 தொகையான முற்பணத் தொகையைப் பெற்று 4 முதல் 14 நாட்கள் வரையான கால இடைவெளியின் பின்னர் ரூபா 199,497 தொகையினை மீளத் தீர்த்து வைத்திருந்தனர்.

(iii) மூன்று உத்தியோகத்தர்களுக்கு 08 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட முற்பணத் தொகை தீர்த்து வைக்கப்படுவதற்கு முன்னர் மீள முற்பணத் தொகை வழங்கப்பட்டிருந்தது.

(iv) தனிப்பட்டவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு மீள கையளிக்கப்பட்டிராத 285 நூலகப் புத்தகங்களும் சேதமுற்றிருந்த 129 புத்தகங்களும் தொடர்பாக நிறுவகத்தினால் முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) உணவு மற்றும் விவசாய அமைப்பிற்குச் சொந்தமான 65 – 1280 ஆம் இலக்க பெஜிரோ ஜீப் வண்டியைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

விவசாய மற்றும் கால்நடை வள அமைச்சின் கீழ் காணப்பட்ட சுற்றுலா விடுதி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டு 06 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் அதன் சட்டபூர்வமான உரிமை நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிறுவகத்தின் பதவியணியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) நிறுவகத்தினால் பேணப்பட்டு வரும் பதவியணி அறிக்கையில் இல்லாத 03 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட வயதெல்லையினை மீறி மூன்று பேரும் அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(iii) அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 04 உத்தியோகத்தர்களின் சேவைக் காலம் முடிவுற்றிருந்த போதிலும் சேவை முடிவுறுத்தப்படவோ அல்லது சேவைக் காலத்தினை நீடிக்காது சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(iv) பராமரிப்பு உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்ட தினத்தில் தொழிநுட்ப டிப்ளோமாச் சான்றிதழைக் கொண்ட நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்ட பராமரிப்பு உத்தியோகத்தர்கு அத்தினத்தில் தகைமை பெற்றிராத போதிலும் ஆட்சேர்ப்பு நடைபெற்றிருந்தது.

(v) நிறுவகத்தின் 7 நிரந்தர பதவிக்காக நிரந்தர நியமனம் வழங்கப்படாது 7 மாதங்கள் முதல் 41 மாதங்கள் வரையான காலத்திற்கு பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டு ரூபா 367,360 தொகையான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(vi) கடமை ஒப்படைப்பு அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் 2010 யூன் மாதம் முதல் 22 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக திறைசேரி அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(vii) 2010 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு மாறாக 33 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மிகையாக 15 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு செய்யப்பட்ட தரவுகளுக்கு உள்ளபடியான தரவுகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) ஆளணி முகாமைத்துவம்

(ii) முற்பணங்கள்

(iii) ஊழியர் கடன்

(iv) நிலையான சொத்துக்கள் முகாமைத்தும்

(v) வருமானக் கணக்குகள்